# பலே வருமானம் தரும் பலா!



தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு அருகே உள்ள மகராஜபுரம் கிராமத்தைச் சேர்ந்த சுந்தரம் உரக்கடை வைத்துள்ளார். ஆனால் அவருடைய தோட்டத்தில் இயற்கை விவசாயம் செய்கிறார். பத்து ஏக்கரில் வாழை, அரை ஏக்கரில் உரிய பலா மரங்கள் வைத்து சாகுபடி செய்கிறார்.

பருவ மழையே பலாவுக்கு போதும்!

வண்டல், செம்மண் மற்றும் மணல் கலந்த மண்ணில் பலா சிறப்பாக விளையும். தண்ணீர் தேங்காத வடிகால் வசதியுடைய மேடட்ட நிலத்தில் மட்டுமே பலா சாகுபடி செய்ய வேண்டும். விதை மூலம் உற்பத்தி செய்த கன்றை, நல்ல காய்ப்புள்ள தாய்மரத்தில் ஒட்டக்கட்டிஇ நடவு செய்தால்தான் மரத்தின் வளர்ச்சி சிறப்பாக இருப்பதுடன், தரமான காய்களும் கிடைக்கும். முப்பது அடி இடைவெளியில் மூன்றடி ஆழமும், மூன்றடி சுற்றனவும் கொண்ட குழி எடுத்து நட வேண்டும். அதிகபட்சம் ஒரு ஏக்கரில் 50 கன்றுகள் நட முடியும். நடவுக் குழியில் 75 சதவிகிதம் தொழுவுரம் , 15 சதவிகிதம் மண்புழு உரம், 5 சதவிகிதம் செம்மண், 5 சதவிகிதம் வேப்பம் பிண்ணாக்கு ஆகியவற்றைக் கலந்து குழியை நிரப்பி, லேசாக தண்ணீர் ஊற்ற வேண்டும். மறுநாள் காலையில்தான் கன்றை நடவு செய்ய வேண்டும்.

ஒரு மாதம் வரை, வாரம் இருமுறையும், அதன்பிறகு வாரம் ஒரு முறையும் தண்ணீர் கொடுக்க வேண்டும். இரண்டாவது ஆண்டு, 15 நாட்களுக்கு ஒரு முறை தண்ணீர் கொடுத்தால் போதும்.

மூன்றாம் ஆண்டு, கடும் கோடையாக இருந்தால் மட்டுமே தண்ணீர் தர வேண்டும். அடுத்தடுத்த ஆண்டுகளில் தண்ணீர் தர வேண்டியதில்லை…

நடவிலிருந்து 5-ம் ஆண்டு காய்ப்புக்கு வரும். அப்போது ஒரு மரத்துக்கு 3 முதல் 4 காய்கள்தான் கிடைக்கும். 6-ம் ஆண்டு சுமார் 8 காய்களும், 7-ம் ஆண்டு 10 காய்களும் கிடைக்கும். அதன் பிறகுதான் படிப்படியாக மகசூல் அதிகரிக்கும். பத்து ஆண்டுகளுக்குப் பிறகு 50 முதல் 100 காய்கள் கிடைக்கும். பூ வந்ததிலிருந்து சுமார் 95-ம் நாள் காய் பரறிக்கலாம். நன்கு பழுக்கும் முன்பே பறித்துவிடவேண்டும். பழுத்துவிட்டால், இதன் வாசனை தெரிந்து பறவைகள் பழத்தை சேதப்படுத்திவிடும். அதேசமயம் இளங்காயாகவும் பறிக்கக் கூடாது. காயில் உள்ள முள்ளை ஒடித்து பார்த்தால் தண்ணீர் போல் ஒரு திரவம் வர வேண்டும். பால் போல் வந்தால் அந்தக் காயை பறிக்கக் கூடாது. காயில் உள்ள முட்கள், நன்கு அகன்று விரிந்து, கையில் குத்தாத நிலையில் இருக்கும் போது பறிக்கலாம். அப்போது காய் நன்கு முற்றி, மிக லேசான மஞ்சள் நிறத்துக்கு மாறியிருக்கும். அதுதான் பறிப்பதற்கு சரியான தருணம். பறித்த சில நாட்களிலேயே பழுத்துவிடும்.

பலா இலைகள் மண்ணில் விழுந்து மட்கி உரமாகி விடுவதால், தனியாக எந்த உரமும் தேவையில்லை. இருந்தாலும், ஆண்டுக்கு ஒரு முறை. மரக்கழ்ன் கிளைகளின் நிழல் முடியும் எல்லையில், மரத்தைச் சுற்றி ஒரு அடி ஆழமும், ஒன்றரையடி அகலமும் கொண்ட குழியை எடுத்து… அதில், மரத்துக்கு 50 கிலோ வீதம் தொழுவுரம் போட வேண்டும். ஒரு கொத்தில் இரண்டு காய்கள் மட்டும் இருந்தால்தான் தரமான பெரிய பழங்கள் கிடைக்கும். அதனால், கொத்துக்கு இரண்டு காய்களை மட்டும் வைத்தக்கொண்டு, கூடுதலாக உள்ள காய்களை மட்டும் வைத்துக்கொண்டு, கூடுதலாக உள்ள காய்களை கறியாக சமைத்துச் சாப்பிடலாம்.

மரத்தின் கீழ்ப்பகுதியில் காய்ப்பு இருந்தால், மண்ணில் பட்டு, அந்தக் காய்கள் அழுகிவிடும். அதனால் எந்த பலனும் இல்லை. மேற்பகதியில் உள்ள காய்களுக்குக் கிடைக்க வேண்டிய சத்துக்களையும் இவை எடுத்துக்கொண்டு விடும். எனவே, மிகவும் கீழ்ப்பகுதியில் பூவிடும் போதே அகற்றிவிட்டால், மற்ற காய்கள் தரமானதாக உருவாகும்.

“பூச்சினு பெருசா வர்றதில்ல. சில காய்கள்ல மட்டும் துளைப்பான் தாக்குதல் இருக்கும். ஆனா, ரசாயனப் பூச்சிமருந்துகள அடிச்சும் பலனில்லாததால நான்கு வருடமாக பூச்சிமருந்து அடிக்கறது இல்லை. அதனால, துளைப்பான் தாக்குதலால சேதமாகும். அதனால, அதை நான் பெருதாக

எடுத்துக் கொள்ளவதில்லை. ஆனா, அந்த ஐந்து சதவிகிதத்தைக் கூட கட்டுப்படுத்துவதற்கு ஏதாவது இயற்கை பூச்சிவிரட்டிகளைப் பயன்படுத்தலாமானு யோசிச்சிட்டிருக்கேன். அதே சமயம், மேலே சொன்ன வழிமுறைகளைச் சரியா கடைபிடிச்சாலே தரமான பிலாப் பழங்களை உருவாக்கலாம்”

ஒரு ஏக்கர்ல பிலா நடவு செய்ய 10 ஆயிரம் ரூபாய் வரை செலவாகும். மகசூல் கொடுத்த மரத்துக்கு, தொடர்ந்து ஒவ்வொரு வருஷமும் அதிகபட்சமா ஆயிரம் ரூபாய் வரை செலவா வருமானமோ 10 ஆயிரம் ரூபாய் வரை கிடைக்கும்”

இதுல வருஷத்துக்கு தலா 100 பழங்கள் நடுத்தரமான அளவுல இருக்கு. மரத்துக்கு மரம் சுமார் 30 அடி இடைவெளியில மொத்தம் 27 மரங்கள் இருக்கு. இதுல வருஷத்துக்கு தலா 100 பழங்கள் கிடைக்கிற மரங்கள் 14 இருக்கு. அதுல 60 முதல் 100 சுளைகள் இருக்கும். பழம் ஒவ்வென்றும் 100 ரூபாயிலிருந்து 150 ரூபாய் வரைக்கும் விலை போகுது.

வருஷத்துக்கு 50 பழங்கள் வரைக்கும் தர்ற மரங்கள் 13 இருக்கு. இதோட பழங்கள் ரொம்பவே பெருசா இருக்கும். அதுல 200 சுளைகள் வரை இருக்கும். ஒரு பழம்,200 முதல் 300 ரூபாய் வரைக்கும் விலை போகுது.

திருக்காட்டுப்பள்ளியில் உள்ள வியாபாரிகள் எப்போதுமே இந்தப் பழங்களை விரும்பி வாங்குவாங்க. இது எல்லாமே நாட்டுப் பிலா. தாய்மரம் நல்லா இருக்கிறதுனால இதுல ஒட்டக்கட்டின கன்றுகள் இல்லாமே அற்புதமா மகசூல் கொடுக்குது.”

தொடர்புக்கு : சுந்தரம்

திருவையாறு அருகில் , மகாராஜபுரம் கிராமம்

தஞ்சாவூர் மாவட்டம்

தொலைபேசி : 04362 - 229570